**D.V.C. 23 of 2022** **Previous Date : 06.05.2024**

**PW2**

**கார்த்திக்கேயன் த/பெ.குமாரகணேசன்**

**21.04.2026**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 21.04.2026.**

**<u>1,3 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1. நான் விருதுநகரில் எத்தனை வருடங்களாக இருக்கிறேன் என்றால் பிறந்ததில் இருந்து இருக்கிறேன். மனுதாரர் எனது சகோதரி மகள் என்றால் ஆமாம், உடன் பிறந்த அக்கா மகள். எனது சகோதரி திருமணமாகி எத்தனை வருடங்களாகிறது என்றால் அவருக்கு 1987ல் திருமணம் நடந்துள்ளது. விருதுநகரில் இருந்து பழனிக்கு எவ்வளவு தூரம் என்றால் சுமார் 170 கி.மீ. இருக்கும். எனது சகோதரி வீட்டிற்கு அவரது திருமணம் முடிந்ததில் இருந்து வருடத்திற்கு எத்தனை தடவை வந்து சென்றேன் என்றால் முன்பு உசிலம்பட்டியில் இருந்தார்கள், அருண் ஐஸ்கிரீம் கடை எடுத்த பிறகு பழனிக்கு வந்துள்ளார்கள். நான் வருடத்திற்கு நான்கு முறை வந்து செல்வேன். எனது சகோதரி குடும்பம் பழனிக்கு வந்து எத்தனை வருடமாகிறது என்றால் 25 – 30 வருடம் இருக்கும். எதிர்மனுதாரர்கள் வீட்டிற்கு மனுதாரர் திருமணத்திற்கு பிறகு எத்தனை முறை சென்று இருப்பேன் என்றால் நான்கு முறை சென்றிருப்பேன். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் யார் சொன்னது என்றால் நான் சொந்தமாக சொன்னது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எப்போது சொன்னேன் என்றால் தாக்கல் செய்யும் போது சொன்னேன். எனது நிரூபண வாக்குமூலத்தின் 3வது பத்தியில் சொல்லியுள்ள நகை, பொருட்கள் அனைத்தையும் திருப்பி வாங்கி கொண்டார்கள் என்றால் ஆமாம். அந்த பொருட்களை திருப்பி வாங்கும்போது 10.09.2022ம் தேதி நானும் கடலூருக்கு சென்றிருந்தேன் என்றால் சரிதான். பிரசவ செலவுக்கு ரூபாய் 45 ஆயிரம் வாங்கி 1ம் எதிர்மனுதாரர் வைத்து கொண்டார் என்று சொல்லியுள்ள விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். பலமுறை கேட்டும் மனுதாரர்/மனைவிக்கு திருப்பி கொடுக்க மறுத்துவிட்டார் என்று சொல்லியுள்ளதில் யார் சொல்லி தெரியும் என்றால் மனுதாரர் சொல்லி தெரியும். இந்தப் பணத்தை மனுதாரரின் சகோதரரிடம் எதிர்மனுதாரர் கொடுத்துவிட்டார் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.**

பிரமாண வாக்குமூலத்தின் 5வது பத்தியில் மனுதாரர் தனது கணவர் வீட்டில் அசல் கல்விச் சான்றிதழ்களை தங்க நகைகளையும், பண்ட பாத்திரங்களையும், கட்டில், பீரோக்களையும் கணவர் வீட்டில் வைத்துவிட்டார் என்று சொல்லியுள்ளதில் அந்த பொருட்கள் 11.09.2022ம் தேதி திரும்ப மனுதாரர் பெற்று கொண்டார் என்றால் ஆமாம். நாங்கள் கடலூருக்கு சென்று பெற்றுக் கொண்டோம்.

2. திருமணத்தை பதிவு செய்யும் ரேசன் அட்டையில் பெயர் சேர்க்கவும் முடியாது என்று எதிர்மனுதாரர்கள் இருந்ததாக சொல்வது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, மனுதாரரின் பெயரை இங்கு நீக்கம் செய்து கடலூருக்கு அனுப்பி விட்டோம், அதற்கு பிறகும் மனுதாரரின் பெயரை ரேசன் அட்டையில் சேர்க்கவில்லை என்றும், திருமணத்தை பதிவு செய்யவில்லை என்றும் மனுதாரர் சொன்னார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வாக்குமூலத்தை நான் பார்த்தேனா என்றால் இல்லை. நான் மனுதாரர் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்களை தான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, நடந்ததை சொன்னேன். 2022க்கு முன்பு நடந்த விபரங்களை மட்டுமே சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம், 14.05.2022 என்று சொல்லியுள்ளேன்(இந்த வழக்கு 2022ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது). இந்த நிரூபண வாக்குமூலம் 2022க்கு முன்பு நடந்ததாக உள்ள விபரங்களை வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் தற்போது தயார் செய்யப்படவில்லை என்றாலும் 2022 வரை நடந்த விபரங்களை சொல்லியுள்ளேன், அதற்கு பிறகு நீதிமன்றத்தில் வழக்கு வந்தது. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் மனுதாரரின் பொருட்களை கடலூரில் சென்று பெற்று வந்தோம் என்றால் சரிதான். மாண்பமை கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் மனுதாரர் குழந்தை கேட்டு மனு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மனுதாரர் குழந்தை கேட்ட வழக்கில் தனக்கு வருமானம் இருக்கிறது என்று சொல்லியுள்ளார் என்றாலும் இந்த வழக்கில் வசதியில்லை என்று இடைக்கால ஜீவனாம்சம் கேட்டுள்ளார் என்றாலும் அந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் என்றாலும் ஆமாம், முன்பு சொத்து இருந்தது தற்போது அவர்களுக்கு வருமானம் குறைந்துவிட்டது. 31.05.2019ம் தேதியன்று 1ம் எதிர்மனுதாரர் எனது Whatsappக்கு மனுதாரர் தன்னிடம் விவாகரத்து கேட்கிறார் என்று Message அனுப்பினார் என்றால் எனக்கு அப்படி message வரவில்லை. 1ம் எதிர்மனுதாரர் எனக்கு மேற்சொன்ன message அனுப்பினார் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன்

என்றாலும் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு வருமானம் வருகிறது என்று 3வது பத்தியில் சொல்லியுள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை, மனுதாரர் சொல்லி எனக்கு தெரியும், நான் அந்த ஆவணத்தை பார்க்கவில்லை.

3. நான் சொல்வதுபோல் எதிர்மனுதாரருக்கு சொத்து இருந்திருந்தால் ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் எங்கள் வழக்கத்தில் சொத்து ஆவண விபரங்களை கேட்பதில்லை. 04.06.2020ம் தேதி மனுதாரரை வலுகட்டாயமாக வெளியே அனுப்பினார்கள் என்று சொல்லியுள்ள அன்று நானும் கடலூர் சென்றேனா என்றால் நான் போகவில்லை எனது தம்பியும், மனுதாரரின் அம்மாவான எனது அக்காவும் போனார்கள். அதற்கு பிறகு என்ன செய்தார்கள் என்றால் மனுதாரர் சாகும் நிலைமையில் இருந்ததால் தூக்கி கொண்டு வந்தோம். பிரமாண வாக்குமூலத்தில் வலுக்கட்டாயமாக வெளியே அனுப்பினார்கள் என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, வெளியே போக சொன்னார்கள், தூக்கி கொண்டு வந்தார்கள். நான் அங்கே போகவில்லை என்பதால் இந்த விபரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, சொன்னார்கள். மனுதாரரின் நடத்தையை கண்டித்தால் மனுதாரரின் வீட்டில் இருந்து தான் போய் மனுதாரரை கூட்டி கொண்டு வந்தார்கள் என்றால் சரியல்ல. 04.06.2020க்கு பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை கடலூருக்கு செல்வதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் 2022 மே மாதம் போனோம். உள்ளே சென்றதற்கு நாங்கள் Diverce வாங்கிவிட்டோம், உள்ளே வரக்கூடாது, குழந்தையை பார்க்கக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள். அதற்கு பிறகு கடலூர் புகார் கொடுத்தோம். 2020ல் இருந்து 2022 வரை கடலூர் செல்வதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் 2020க்கு முன்பு மனுதாரருக்கு mental tortureஐ சரி செய்வதற்கு 9 மாதங்களாகிவிட்டது. அதற்கு பிறகு மனுதாரர் Video Callல் பேசி கொண்டிருந்தார். அந்த பேச்சு நின்றதால் தான் நாங்கள் போனோம். Video Callல் பேசுவதை மனுதாரர் தான் தவிர்த்து விட்டார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு தான் கடலூர் திருப்பாப்புலியூர் காவல் நிலையத்திலும் பழனி அனைத்து மகளிர் காவல் நிலையத்திலும் மனுதாரர் புகார் கொடுத்தார் என்றால் ஆமாம், கடலூருக்கு சென்ற பிறகு சேர்க்கவில்லை என்பதால் அப்போது புகார் கொடுத்தோம். 2020ல் இருந்து 2022 வரை மனுதாரர் அவரது

செய்கைகளை மாற்றி கொள்ளவில்லை என்பதால் தான் அதற்கு பிறகு விவாகரத்து வாங்கினார் என்றால் சரியல்ல. விவாகரத்து வாங்கியது தெரிந்த பின்பு 1ம் எதிர்மனுதாரர் மீது கோவப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நாங்கள் கடலூருக்கு மனுதாரரை 1ம் எதிர்மனுதாரர் வீட்டிற்கு அழைத்து சென்ற பின்பு தான் விவாகரத்து விசயமே தெரியும். இரண்டு காவல் நிலையத்திற்கும் நான் சென்றிருந்தேன் என்றால் திருப்பாப்புலியூருக்கு சென்றிருந்தேன், பழனி காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. நிரூபண வாக்குமூலத்தில் பழனி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 18.05.2022ம் தேதி புகார் கொடுத்து CSR கொடுத்து எந்த முன்னேற்றமும் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம், மனுதாரர் சொல்லி தெரியும். மனுதாரர் கொடுத்த புகாரில் உண்மை இல்லை என்பதால் தான் பழனி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்ய முகாந்திரம் வேண்டும் என்பதால் அதை காட்டுவதற்கு பொய்யாக புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. ஸ்ரீநாத் என்பவர் அவரது அப்பாவான 2ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து தொழில் செய்து வருகிறார் என்று சொல்லியுள்ளதில் தற்போது ஸ்ரீநாத் பாண்டிச்சேரியில் இருக்கிறார் என்றால் தற்போது ஸ்ரீநாத் எங்கு இருக்கிறார் என்று தெரியாது, 2022 வரை அங்கிருந்தார். நான் சொல்வதுபோல் மனுதாரருக்கு 1,3 எதிர்மனுதாரர்கள் எந்த கொடுமையும் செய்யவில்லை என்றாலும் மனுதாரர் எனக்கு உடன் பிறந்த அக்கா மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றாலும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரியல்ல.

**<u>2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை (V.C.)</u>**

4. மனுதாரர் தாக்கல் செய்த மனுவை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. மனுதாரர் மனுவில் என்னை பற்றி சொல்லவில்லை என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது வீட்டிற்கும், மனுதாரர் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 170 கி.மீ. எதிர்மனுதாரர்கள் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் கடலூருக்கும், எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்று தெரியவில்லை சுமார் 450 கி.மீ. இருக்கும்.

**கேள்வி**

**நான் மனுதாரர் வீட்டிலும், மனுதாரர் திருமணம் முடிந்த எதிர்மனுதாரர் வீட்டிலும் அவர்களுடன் சேர்ந்து வாழ்ந்தீர்களா என்றால்**

இந்த சாட்சி தனது நிரூபண வாக்குமூலத்தில் எந்த இடத்திலும் மனுதாரர் வீட்டிலோ, எதிர்மனுதாரர் வீட்டிலோ எங்குமே சேர்ந்து வாழ்ந்தேன் என்று எந்த சங்கதியும் சொல்லாத நிலையில் குடும்ப விவகாரம் சம்மந்தமான இந்த வழக்கில் மனுதாரரின் தாய்மாமா என்று சாட்சி சொல்லும் இந்த சாட்சியை பார்த்து இந்த கேள்வியை கேட்பது இந்த வழக்கில் உள்ள பிரச்சனைக்கு எந்த வகையிலும் தொடர்பு இல்லை என்று இந்த கேள்வி குடும்ப விபரங்கள் தொடர்பான வழக்கில் மனத்தை புண்படுத்தும் வகையில் இருப்பதாலும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 148ன் வகையிலும் பதிலளிக்க தேவையில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

கற்றறிந்த 2ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தின் 2வது பத்தியில் 4வது வரியில் திருமணத்திற்கும் முன்பும், திருமணத்திற்கு பின்பு நாளது தேதி வரையிலும் நடைபெற்று வரும் குடும்ப விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்று தெரியும் என்று சொல்லியுள்ளதால் மேற்கண்ட கேள்வியை கேட்டதாக தெரிவித்தார். ஆனால் மேற்சொன்ன கற்றறிந்த 2ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் சுட்டிகாட்டிய பகுதியில் இந்த சாட்சி மனுதாரர் வீட்டிலோ, எதிர்மனுதாரர் வீட்டிலோ சேர்ந்து வாழ்ந்தார் என்று எந்த குறிப்பும் இல்லை என்பதால் மேற்கண்ட பிரமாண வாக்குமூலத்தை சுட்டி காட்டி சொன்ன விளக்கம் நிலைக்கத்தக்கதல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

நான் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் வீட்டில் இல்லாத காரணத்தினால் 2ம் எதிர்மனுதாரர் வீட்டில் கடலூரில் என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், மனுதாரர் சொல்லி தான் தெரியும். மனுதாரர் சொல்லியுள்ள சங்கதிகளும் கடலூரில் நடந்ததாக சொல்லும் சங்கதிகளும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் மனுதாரர் சொல்லி தான் நான் சொல்லியுள்ளேன் என்றாலும் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் கொடுமைப்படுத்தியதாக சொல்லியதில் தேதி சொல்லவில்லை என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் கொடுமைப்படுத்தியதாக

சொல்லியது எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் மனுதாரர் சொல்லி தான் தெரியும் என்றாலும் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் மாதம் ரூபாய் 2 லட்சம் வருமானம் சம்பாதிக்கிறார் என்று சொல்லியுள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, மனுதாரர் சொன்னதை வைத்து சொன்னேன்.

**கேள்வி**

1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள விவாகரத்து வழக்கில் என்ன விபரம் சொல்லி தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் கற்றறிந்த 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் 1ம் எதிர்மனுதாரருக்கு வக்காலத்து எதுவும் தாக்கல் செய்யவில்லை என்பதாலும் அந்த விவாகரத்து மனுவினை 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யவில்லை என்பதாலும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இந்த கேள்வியை கேட்கலாம் என்று தெரிவித்தாலும் இந்த கேள்விக்கும், இந்த சாட்சிக்கும் (Remote) தொலை தூர அளவில் கூட தொடர்பு இல்லை என்பதாலும் இந்த கேள்வி இந்த சாட்சியை பொறுத்து ஒரு தொடர்பு இல்லாத கேள்வி என்று இந்திய சாட்சிய சட்டம் 148ன் கீழ் தொடர்பற்றது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இந்த வழக்கு 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கிற்கு பிறகு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்று எனக்கு தெரியுமா என்றால் ஆமாம்.(விவாகரத்து போட்ட விபரம் கடலூருக்கு போன பிறகு தான் எங்களுக்கு தெரியும், என்று சாட்சி தானாக சொன்னார்). நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எதுவும் உண்மை இல்லை என்பதால் தான் மனுதாரரின் அப்பாவும், அம்மாவும் சாட்சி சொல்ல வரவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் கேட்டு கொண்டதன்பேரில் பொய்யாக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மனுதாரரின் குடும்ப உறுப்பினர் இல்லை என்பதாலும், எதிர்மனுதாரரின் குடும்ப உறுப்பினர் இல்லை என்பதாலும் இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிப்பது சரியானது இல்லை என்றால் நான் தான் திருமணத்திற்கு மண்டபம் பார்த்து, சமையல் பார்த்து எல்லாம் செய்து நான் தான் அழைந்து கொண்டிருக்கிறேன், மனுதாரரின் அப்பாவிற்கு உடம்பு சரியில்லாமல் மூளை அறுவை சிகிச்சை செய்து இருக்கிறார். நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள அனைத்து பத்திகளும் பொய்யானது என்றாலும்

அதனால் தான் போலிசார் மனுதாரரின் புகார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. மனுதாரர் எந்த பள்ளியில் வேலை செய்கிறார் என்றால் ஒரு பயிற்சி நிறுவனத்தில் வேலை செய்கிறார், அந்த பயிற்சி நிறுவனம் சொல்லும் பள்ளிக்கூடத்திற்கு செல்வார். மனுதாரர் இந்த வழக்கு மனுவிலும் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் குழந்தையை கேட்டிருக்கிறார், மனஉளைச்சலுக்கு பரிகாரம் கேட்டுள்ளார், பிள்ளை வளர்ப்பதற்கான செலவு கேட்டுள்ளார். மனஉளைச்சல் என்று சொல்லியுள்ளதில் என்ன மாதிரியான மனஉளைச்சல் என்பது நான் கடலூரில் இல்லை என்பதால் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, மருத்துவமனையில் மருத்துவர் மனுதாரர் ரொம்ப மனஉளைச்சலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார் என்று சொன்னார். எனது பிரமாண வாக்குமூலத்தில் மருத்துவமனை ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் நேரடியாக தெரியாது என்பதால் மனுதாரர் கேட்டு கொண்டதால் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எந்த கொடுமையும் செய்யவில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.04.21 17:49:37 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.